# மங்கள வார்த்தை திருநாள் பூசையும் அதன் விளக்கமும்

- சங். கெராஞ்ஜே சுவாமி.

கத்தோலிக்க திருச்சபையின் மிகப்பெரிய தேவ திரவியங்களில் ஒன்று நமதாண்டவரின் மனிதாவதாரத் திருநிகழ்ச்சியாகும். மங்கள வார்த்தைத் திருநாள் என்றழைக்கப்படும் இதன் வழிபாட்டு நிகழ்வுகளை தெரிந்துகொள்ள, அத்திருநாளின் திவ்விய பலிபூசைபற்றிய ஒரு கட்டுரையினைத் தருகிறோம். நம்மை இரட்சிக்க மனுவுருவான நமதாண்டவர் மீது நாம் கொண்டிருக்கும் பக்தியை வளர்ப்பதற்கு இக்கட்டுரை வாசகர்களுக்கு உதவும் என்பது எமது எண்ணம். ஒருவேளை இத்திருநாளன்று பூசை காணமுடியாதவர்கள் இக்கட்டுரையைப் படித்துத் தியானித்து தங்கள் உள்ளத்தை ஆண்டவரிடம் எழுப்ப முயல வேண்டும். (ஆ.ர்.)

**பிரவேசக்கீதம் : சங்.44:13-16**

**மக்களுள் செல்வந்தர்கள் அனைவரும் உமது தயவை நாடி வேண்டுதல் புரிந்துகொண்டி ருப்பார்கள; அவளுக்குப்பின் கன்னிகைகள் இராஜாவிடம் கூட்டிவரப்படுவார்கள்; அவளுடைய தோழிகள் ஆனந்தத்தோடும் அக்களிப்போடும் உம்மிடம் அழைத்து வரப்படுவார்கள். என் இருதயம் ஓர் நல்ல வார்த்தையை வெளியிட்டது; என்னுடைய செய்கைகளை இராஜாவுக்கு சொல்லுகிறேன். - பிதாவுக்கும்...**

திருச்சபை இன்றைய பூசையின் பெரும்பாலான கீதங்களை நாற்பத்து நான்காம் சங்கீதத்திலிருந்து எடுத்திருக்கிறது. இந்த சங்கீதத்தில் தாவீது இராஜா சேசுநாதரின் மனிதாவதாரத்தின் பரம இரகசியத்தைக் கொண்டாடுகிறார். பிரவேசக்கீதத்தில் திருச்சபை ஒவ்வொரு சிருஷ்டியும் மரியாதை வணக்கம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிற மாமரியை

மனுக்குலத்தின் இராக்கினியாக வாழ்த்துகிறது. மாமரியின் பரிசுத்த கன்னிமைதான் அவர்கள் கடவுளின் தயாராவதற்கு அவர்களைத் தகுதியுள்ளவர்களாக்கியது. இந்தப் புண்ணியம் திருச்சபையில் கண்டுபாவிக்கப்படும். ஒவ்வொரு தலைமுறையும் ஆயிரக்கணக்கான பரிசுத்த கன்னியர்களைப் பிறப்பிக்கும். இவர்கள் தங்கள் திருமாதாவுக்கும், தங்கள் முன்மாதிரிகையுமானவர்களின் பாதச்சுவடுகளில் நடப்பார்கள்.

## சபைச் செபம்

**சர்வேசுரா, தேவரீருடைய சம்மனசானவர் மங்களஞ் சொன்னபோது, முத்திப்பேறுபெற்ற கன்னிமரியாயின் உதரத்தில் உமது வார்த்தையானவர் மாமிசமாகச் செய்தருளச் சித்தமானீரே, அவள் மெய்யாகவே தேவதாய் என்று விசுவசிக்கிற நாங்கள் உம்மிடத்தில் அவளுடைய மன்றாட்டுகளின் உதவியைப் பெற்றுக்கொள்ளும்படி உம்மை நோக்கி மன்றாடுகிற எங்கள் மீது கிருபை கூர்ந்தருளும். தேவரீரோடு இஸ்பிரீத்துசாந்துவின் ஐக்கியத்தில் சர்வேசுரனும், சதாகாலமும் சீவியரும் இராச்சிய பரிபாலனஞ் செய்கிறவருமாயிருக்கிற உமது திருக்குமாரனும் எங்கள் ஆண்டவருமான அதே சேசு கிறீஸ்துவின் பேரால் - ஆமென்.**

சபைச் செபத்தில், திருச்சபை மாமரியின் தெய்வீகத் தாய்மையில் தான் கொண்டுள்ள விசுவாசத்தில் மகிமை கொள்கிறது. அது மாமரியின் திருக்குமாரனாயிருக்கிற சர்வேசுரனிடம் அவர்களுடைய பரிந்துரைக்குத், தான் கொண்டுள்ள உரிமையாக இந்த விசுவாசத்தை முன் வைக்கிறது. மாமரி சர்வேசுரனுடைய மாதாவாக இருக்கிறார்கள் என்னும் வேதசத்தியமானது, நம் விசுவாசத்தின் அஸ்திவாரமாக இருப்பதும், இந்த மார்ச் மாதத்தின் இருபத்தைந்தாம் நாளன்று நிறைவேற்றப்பட்டதுமாகிய மனிதாவதாரப் பரம இரகசியத்தைத் தன் அடித்தளமாகக் கொண்டுள்ளது.

## நிருபம் : இசை.7:10-15

**அந்நாட்களில் : ஆண்டவர் அக்காஸிடம் பேசி, அவனைப் பார்த்து: பாதாளத்தின் கீழாகிலும், மேலே வானத்தின் உச்சிலாகிலும், உனக்கு ஒரு அற்புத அடையாளம் தர உன் தேவனாகிய ஆண்டவரைக் கேள் என்றார். அதற்கு அக்காஸ் :**

**யான் கேளேன்; ஆண்டவரைப் பரிசோதியேன் என்றான். அப்போது இசையாஸ் : தாவீதின் வீட்டாரே, கேளுங்கள் நீங்கள் மனிதர்களை மனசஞ்சலப்படுத்துவது போதாதென்றோ என் ஆண்டவரையும் விசனப்படுத்து கிறீர்கள்? ஆதலால், ஆண்டவர்தாமே உங்களுக்கு ஒரு அற்புத அடையாளந் தருவார். இதோ! ஒரு கன்னிகை கர்ப்பந்தரித்து, ஒரு குமாரனைப் பெறுவாள். அவருடைய நாமம் எம்மானுவேல் என்று அழைக்கப்படும். அவர் தின்மையை விலக்கி நன்iமயைக் கைக்கொள்ளும்படி அறிவு உண்டாகுந்தனையும் வெண்ணெயையும் தேனையும் அருந்துவார்.**

இசையாஸ் தீர்க்கதரிசி, தீயவனான ஓர் அரசனிடம் பேசிக்கொண்டிருக்கிறார். அவன் ஜெருசலேமின் மீதான கடவுளின் இரக்கமுள்ள பாதுகாவலின் ஓர் அற்புதமான நிரூபணத்iத ஏற்க மறுத்தான்; தீர்க்கதரிசியானவர் நாம் இன்று கொண்டாடுகிற மாபெரும் அற்புத அடையாளத்தை யூதாவுக்கு அறிவிக்க இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டார். கன்னியானவள் கர்ப்பந்தறித்து ஒரு மகனைப் பெறுவாள். இந்த் தீர்க்கதரிசனத்தைக் கடவுள் நிறைவேற்றியது எப்போது? மனுக்குலம் தன் கொடிய தன்மையின் உச்ச நிலையை அடைந்து விட்டதாகத் தோன்றிய ஒரு காலகட்டத்தில் இது நிகழ்ந்தது. விக்கிரக வழிபாடும் ஒழுக்கக் கேடும் உலக முழுவதும் ஆட்சி செய்த ஒரு காலக் கட்டத்தில் இது நிறைவேறியது. காலம் நிறைவேறியது. கன்னியானவள் கருத்தரித்து ஒரு குமாரனைப் பெறுவாள் என்னும் பாரம்பரியம் ஒவ்வொரு தேசத்துக்குள்ளும் பிரவேசித்து, மிக அதிகமான ஆவலை விளைவித்துக் கொண்டிருந்தது. இந்தப் பரம இரகசியம் நிறைவேறிய நாள் இதுதான்; நாம் கடவுளின் வல்லமையையும், தம் வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவதில் அவர் காட்டுகிற பிரமாணிக்கத்தையும் ஆராதிப்போமாக. இயற்கைச் சட்டங்களின் கர்த்தர் அவற்றை நிறுத்தி வைக்கிறார், அவற்றின் சார்பின்றி அவர் செயல்படுகிறார்; கன்னிமையும், தாய்மையும் ஒரேயொரு சிருஷ்டியில் ஒன்றாக இணைக்கப்படுகின்றன, ஏனென்றால;, அந்த சிருஷ்டியிடமிருந்து பிறக்க இருக்கிற திருக்குழந்தையானவர் சர்வேசுரனாக இருக்கிறார். ஒரு கன்னிகை

கடவுளையே தவிர வேறு யாரையும் பெற்றெடுக்க முடிந்திராது; ஆகவே, மாமரியின் திருச்சுதனானவர் எம்மானுவேல், அதாவது கடவுள் நம்மோடு என்று அழைக்கப்படுகிறார்.

காண்பவையும், காணாதவையுமாகிய சகல காரியங்களினுடைய சிருஷ்டிகரும், இவ்வாறு தம்மை தாழ்த்திக் கொள்கிறவருமாகிய இந்த சர்வேசுரனை நாம் ஆராதிப்போமாக. இந்நேரத்தில் இருந்து, அவர் தம் தெய்வீகத்தை மட்டுமின்றி, நம்மை இரட்சிக்கத்தக்கதாக தாம் எடுத்துக் கொண்ட தமது மனித சுபாவத்தையும் கூட ஒவ்வொரு நாவும் அறிக்கையிடும்படி செய்வார். இந்த நாளில் இருந்து அவர் மெய்யாகவே மனுஷ குமாரனாக இருக்கிறார். மற்ற குழந்தைகளைப் போலவே அவரும் தம் தாயின் திருவுதரத்தில் ஒன்பது மாதங்கள் தங்கியிருப்பார். அவர்களைப் போலவே அவரும் தம் பிறப்பிற்குப் பிறகு பாலையும், தேனையும் உணவாகக் கொள்வார். பச்சிளங் குழந்தைப் பருவம் முதல் முழுமையான மனிதப் பருவம் வரை மனித வாழ்வின் ஒவ்வொரு நிலையையும் அவர் அர்ச்சிப்பார். ஏனெனில் பாவத்திற்கு முந்தைய பழைய மனிதனை மீண்டும் தாம் ஸ்தாபிக்கும்படியாக பரலோகத்திலிருந்து இறங்கி வந்திருக்கிற புதிய மனிதர் அவரே. நம்மைத் தமது தெய்வீக சுபாவத்தில் பங்காளிகளாக்கும்படி (2இரா.1:4) தம்முடைய தெய்வீகத்தைக் கொஞ்சமும் இழக்காமலே அவர் நம்முடைய பலவீனமான, அழியக்கூடிய தன்மையை நம்மோடு பகிர்ந்து கொள்கிறார்.

**படிக்கீதம்:சங்.44:3-5**

**உம்முடைய உதடுகளிலே வரப்பிரசாதம் பொழியப்பட்டிருக்கிறது; ஆகையால், சர்வேசுரன் உம்மை நித்தியத்திற்கும் ஆசீர்வதித்தார். உண்மை, சாந்தம், நீதி இவைகளை முன்னிட்டு உமது வலக்கரம் அற்புதமாய் உம்மை நடத்தும்.**

படிக்கீதத்தில் திருச்சபை தாவீதோடு இணைந்து எம்மானுவேலின் அழகையும், அவருடைய இராச்சியத்தையும், அவருடைய பலத்தையும் போற்றித் துதிக்கிறது. ஏனெனில் மீண்டும் தாம் மகிமையில்

மேலெழும்பும்படியாக அவர் போரில் ஈடுபடுவதற்காக வருகிறார், கைப்பற்றும் படியாகவும், வெற்றிபெறும்படியாகவும் அவர் போரில் ஈடுபட வருகிறார்.

**நெடுங்கீதம்:சங்.44:11-12**

**குமாரத்தியே கேள்: கண் திறந்து உன் செவிசாய்த்துக் கேள்: ஏனெனில், இராஜா உன் அழகை மிகவும் விரும்பினார். மக்களுள் செல்வந்தர்கள் அனைவரும் உமது தயவை நாடி உமக்கு வேண்டுதல் புரிந்துகொண்டிருப்பார்கள். இராஜாக்களுடைய குமாரத்திகள் உமது மகிமையில் பின்செல்வார்கள். அவளுக்குப்பின் கன்னிகைகள் இராஜாவிடம் கூட்டிவரப்படுவார்கள்; அவளுடைய தோழிகள் உம்மிடம் அழைத்துவரப்படுவார்கள். ஆனந்தத்தோடும் அக்களிப்போடும் உம்மிடம் அழைத்து வரப்படுவார்கள், இராஜாவின் ஆலயத்தில் கூட்டிவரப்படுவார்கள்.**

நெடுங்கீதத்தில் திருச்சபை அதே கீதத்தைத் தொடருகிறது. ஆனால் இங்கு அது கன்னிகையும், தாயாருமாகிய மாமரியைப் புகழ்கிறது. இஸ்பிரித்துசாந்துவானவர் அவர்களுடைய ஒப்பற்ற அழகுக்காக அவர்களை நேசிக்கிறார்; இந்த நாளில்தான் அவர் அவர்கள்மீது நிழலிடுகிறார். அதனால் அவர்கள் வார்த்தையானவரைக் கருத்தரிக்கிறார்கள். தமத்திரித்துவத்தின் மூன்று ஆட்களுக்கும் பூரண திருப்தியளிக்கும் வஸ்துவாக இருக்கிற மரியாயின் மகிமையைப் போன்ற மகிமை வேறு எங்கு இருக்கிறது? சர்வேசுரனுடைய திருமாதாவை விட அதிக மேன்மையுள்ள யாரையும், எதையும் அவரால் படைத்திருக்க முடியாது. அவருடைய இந்தத் திருக்குமாரத்தி எப்படி பூலோகத்தின் மனிதர்களுக்குள் மேன்மைமிக்கவர்களால் மகிமைப்படுத்தப் படுவார்கள். பரிசுத்த கன்னியர்கள் எப்படி மாமரியைச் சூழ்ந்திருந்து, தங்கள் இராக்கினியும், முன்மாதிரிகையுமாகிய அவர்களைப் பின்செல்வார்கள் என்று தாவீதரசர் முன்னுரைக்கிறார். இந்த நாள் அவர்களுடைய கன்னிமையின் வெற்றியாகவும் இருக்கிறது. ஏனெனில் அது தெய்வீகத்

தாய்மையின் மகத்துவத்திற்கு உயர்த்தப்படுகிறது! அவர்களுடைய வெற்றி பெண்ணினத்தை அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கிறது. மதிப்பிற்குரியதும், மேன்மையுள்ளதுமான சகலத்தையும் செய்யத் திறனுள்ளதாக அதை ஆக்குகிறது.

**சுவிசேஷம்:லூக்.1:26-38**

**அக்காலத்தில்: ஆறாம் மாதத்திலேää கபிரியேல் எனனும் தேவதூதன் கலிலேயா நாட்டிலுள்ள நசரேத்தூருக்குச் சர்வேசுரனால் அனுப்பப்பட்டு, தாவீதின் கோத்;திரத்தாராகிய சூசையப்பர் என்னப்பட்ட ஓர் மனிதனுக்கு விவாக பந்தனமான ஓர் கன்னிகையிடத்தில் வந்தார். அந்தக் கன்னிகையின் பெயர் மரியம்மாள் தேவதூதன் அவளிருந்த இடத்தில் பிரவேசித்து, பிரியதத்தத்தினாலே பூரணமானவளே வாழ்க! கர்த்தர் உம்முடனே; ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே என்றார். இதை அவள் கேட்ட மாத்திரத்தில், அவருடைய வார்த்தையினால் கலங்கி, இந்த மங்களம் எத்தன்மையானதோ என்று யோசனையாயிருக்கையில், தேவதூதன் அவளை நோக்கி: மரியே! நீர் அஞ்ச வேண்டாம், ஏனெனில் சர்வேசுரனிடத்தில் கிருபை பெற்றிருக்கிறீர். இதோ, உமது உதரத்தில் கெற்பந்தரித்து, ஓர் குமாரனைப் பெறுவீர்; அவருக்கு சேசு எனும் நாமஞ் சூட்டுவீர். அவர் பெரியவராயிருப்பார். உன்னதமானவருடைய சுதன் எனப்படுவார்; ஆண்டவரான சர்வேசுரன் அவர் தந்தையாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குத் தந்தருளுவார்; ஆதலால் அவர் யாக்கோப்பின் கோத்திரத்தில் என்றென்றைக்கும் அரசாளுவார். அவருடைய அரசாட்சிக்கு முடிவு இராது என்றார். அப்போது மரியம்மாள் தேவதூதனைப் பார்த்து: இது எப்படியாகும்? நான் புருஷனை அறியேனே? என்று சொல்ல, தேவதூதன் அவளுக்கு மாறுத்தாரமாக: இஸ்பிரித்துசாந்து உமது மேல் எழுந்தருளி வருவார், உன்னதருடைய வல்லபமானது உமக்கு நிழலிடும், ஆகையால் உம்மிடத்தல் பிறக்கும் பரிசுத்தர் தேவசுதன் எனப்படுவார். இதோ, உமக்குப் பந்துவாகிய எலிசபெத்தும் தன் முதிர்வயதிலே ஓர் புத்திரனைக் கெற்பந்தரித்திருக்கிறாள். மலடி எனப்பட்ட அவளுக்கு இது ஆறாம் மாதம். ஏனெனில் சர்வேசுரனால் கூடாத வாக்கு ஒன்றுமில்லை என்றார். அப்போது மரியம்மாள்: இதோ, நான் ஆண்டவருடைய அடிமை, உம்முடைய வார்த்தையின்படியே எனக்கு ஆகக்கடவது என்றவுடனே தேவதூதன் அவளைவிட்டு அகன்று போனார்.**

இதோ ஆண்டவருடைய அடிமையானவள், உம்முடைய வார்த்தையின்படியே எனக்கு ஆகக் கடவது என்ற உங்கள் கடைசி வார்த்தைகளால், ஓ மாமரியே! எங்கள் மகிழ்ச்சி நிலைப்படுத்தப்படுகிறது. பரலோகத்தின் விருப்பத்திற்கு நீர் சம்மதிக்கிறீர். உங்கள் சம்மதம் எங்களுக்கு இரட்சகரைக் கொண்டு வருகிறது. ஓ கன்னி மாதாவே! பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே! நாங்கள் சம்மனசுக்களால் உங்களுக்குச் செலுத்தப்படுகிற மேரை மரியாதையோடு எங்கள் நன்றிகளையும் இணைக்கிறோம். உம்மால்தான் எங்கள் அழிவு சரியசெய்யப்படுகிறது; உம்மிலேதான் எங்கள் சுபாவம் மீண்டும் ஸ்தாபிக்கப்படுகிறது; ஏனெனில் நீரே சாத்தானின் மீது மனிதனின் வெற்றியைச் செயல்படுத்தியுள்ளீர்! அர்ச். பெர்நார்ட், இந்த சுவிசேஷப் பகுதியைப் பற்றிய தம்முடைய பிரசங்கங்களில் ஒன்றில், இவ்வாறு பேசுகிறார்: "ஓ எங்கள் தகப்பனாகிய ஆதாமே, அக்களிப்பீராக! ஆனால் ஓ எங்கள் தாயாகிய ஏவையே, நீ இன்னும் அதிகமாக அக்களிப்பாயாக! நீங்கள் எங்கள் பெற்றோராக இருந்தீர்கள், ஆனால் நீங்கள் எங்களை அழித்தவர்களாகவும் இருந்தீர்கள்; இதை விடக் கேடானது என்னவெனில்; எங்களைப் பெற்றெடுப்பதற்கு முன்பாகவே எங்கள் அழிவை நீங்கள் செயல்படுத்தி விட்டீர்கள். நீங்கள் இருவரும் இவர்களைப் போன்ற ஒரு மகளைக் கொண்டிருப்பதில் ஆறுதலடைந்திருக்க வேண்டும்; ஆனாலும் ஓ ஏவையே, எங்கள் நிர்ப்பாக்கியத்தின் முதல் காரணமாக இருந்தவளே, உன்னுடைய அவமானத்தை எல்லாப் பெண்களின் மீதும் இறங்கச் செய்வதவளே, நீ மாமரியில் அகமகிழ ஒரு விசேஷமான காரணம் இருக்கிறது. அதேதெனில், இதோ உன் அவமானம் போக்கப்படுகிற காலம் வந்துவிட்து. "நீர் எனக்குத் தந்தருளின ஸ்திரீ தான் இந்த மரத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள். நானும் உண்டேன்" என்று ஆண்மகன் சொல்லி, பழியையெல்லாம் கொடுமையான முறையில் பெண்ணின் மீது சுமத்திவிட்டு, மூடத்தனமாக தனக்குத் தானே சாக்குப்போக்குச் சொல்லத் தேடின பண்டைய காலத்தைப் போல, இனி அவன் பெண்ணுக்கெதிராக

முறையிடவும் முடியாது. போ ஏவையே, மரியாயிடம் போ; தாயே, உன் மகளிடம் போ; உன் மகள் உன் பாகத்தை தான் எடுத்துக் கொண்டு, உன் அவமானத்திலிருந்து உன்னை விடுவித்து, தன் பிதாவோடு மீண்டும் உன்னை ஒன்றிணைத்து வைக்கட்டும். ஏனெனில், மனிதன் பெண்ணால் வீழ்ச்சியடைந்தது போல, அவன் ஒரு பெண்ணாலேயே எழுப்பப்படுகிறான்.

நீர் எனக்கு தந்தருளின ஸ்திரீ தான் இந்த மரத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள். நானும் உண்டேன் என்று நீர் சொல்வதென்ன, ஆதாம்? இவை தீய வார்த்தைகள்; உம்முடைய பாவத்தைத் துடைத்தழிப்பதற்குப் பதிலாக, அவை அதை இன்னும் மோசமாக்குகின்றன. ஆனால் தேவ ஞானமானது, தம்முடைய சொந்த வற்றாத இரக்கத்தின் கருவூலத்திலிருந்து மன்னிப்பிறகான ஒரு காரணத்தைக் கண்டுபிடிப்பதன் மூலம், அவர் உம்முடைய அக்கிரமத்தின் மேல் வெற்றி கொண்டார். உம்மிடம் கேள்வி கேட்பதன் மூலம் அப்படிப்பட்ட ஒரு காரணத்தைச் சிரமப்பட்டாவது கண்டுபிடிக்க அவர் வீணாக முயன்றார். நீர் யாரைப் பற்றி முறையிட்டீரோ, அந்தப் பெண்ணின் இடத்தில், அவர் வேறு ஒரு பெண்ணை உமக்குத் தருகிறார். ஏவாள் முட்டாளாக இருந்தாள், மாமரியோ ஞானமுள்ளவர்களாக இருக்கிறார்கள்; ஏவாள் அகங்காரமுள்ளவளாக இருந்தாள், மாமரியோ தாழ்ச்சியுள்ளவர்களாக இருக்கிறார்கள். ஏவாள் சாவின் மரத்தின் கனியைத் தந்தாள், மாமரியோ உமக்கு ஜீவிய மரத்தின் கனியைத் தருவார்கள்; ஏவாள் கசப்புள்ளதும், நஞ்சுள்ளதுமான கனியை உமக்குத் தந்தாள், மாமரியோ தானே பெற்றெடுக்க இருக்கிற நித்திய ஜீவித்தின் கனியாகிய இனிமையுள்ள கனியை உமக்குத் தருவார்கள். ஆகவே உம்முடைய அக்கிரமமுள்ள சாக்குப்போக்கை நன்றியறிதலின் ஜெபமாக மாற்றிக்கொண்டு, “ஓ ஆண்டவரே, தேவரீர் எனக்குத் தந்தருளின ஸ்திரீ எனக்கு ஜீவிய மரத்தின் கனியைத் தந்தருளினாள், நானும் அதை உண்டேன். அது என் வாய்க்கு

தேனை விட மதுரமாயிருக்கிறது. ஏனெனில் அதைக் கொண்டு, தேவரீர் எனக்கு ஜீவியத்தைத் தந்தருளினீர்" என்று சொல்லும். (ளுவ. டீநசயெசனஇ ர்ழஅடை.ஐஐஇ ளரிநச ஆளைளரள நளவ).

**ஒப்புக்கொடுத்தல்:லூக்.1:28-42**

**மரியாயே, வரப்பிரசாதங்களினால் நிறைந்தவளே, வாழ்க! கர்த்தர் உம்முடனே; பெண்களுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே; உம்முடைய திருவயிற்றின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டதாமே!**

ஒப்புக்கொடுத்தல் ஜெபத்தில் திருச்சபை, கபிரியேல் அதிதூதர் மாமரியிடம் பேசிய வார்த்தைகளைக் கொண்டு அவர்களை வாழ்த்துகிறது. தன் தேவனுடைய தாயாரை வாழ்த்த எலிசபெத் பயன்படுத்திய வார்த்தைகளையும் அதனோடு சேர்த்துக் கொள்கிறது.

**அமைதி மன்றாட்டு**

**ஆண்டவரே, பரிசுத்த கன்னிகையிடம் உற்பவித்தவர் மெய்யான சர்வேசுரனும், மெய்யான மனுஷனுமானவர் என்று ஏற்றுக்கொள்கிற நாங்கள், இரட்சணியத்தைத் தரும் அவருடைய உத்தானத்தின் வல்லமையினால் நித்திய ஆனந்தத்தை அடைய அருகராகும்படி, எங்கள் மனதில் மெய்யான விசுவாசத்தின் பரம இரகசியங்களை உறுதியாய்ப் பதியச் செய்தருளத் தேவரீரை மன்றாடுகிறோம். தேவரீரோடு இஸ்பிரித்துசாந்துவின் ஐக்கியத்தில் சர்வேசுரனும், சதாகாலமும் சீவியரும் இராச்சிய பரிபாலஞ் செய்கிறவருமாயிருக்கிற உமது திருக்குமாரனும் எங்கள் ஆண்டவருமான அதே சேசு கிறீஸ்துவின் பேரால் - ஆமென்.**

அமைதி மன்றாட்டில், திருச்சபை மனிதாவதாரப் பரம இரகசியத்தில் தனது விசுவாசப் பிரகடனத்தைப் புதுப்பிக்கிறது; அது தேவ சுதனானவரும், மாமரியின் திருக்குமாரனுமாகிய சேசுக் கிறீஸ்துநாதரில் உள்ள தேவ சுபாவம், மனித சுபாவம் ஆகிய இரண்டு சுபாவங்களின் நிஜத்தன்மையை அறிக்கையிடுகிறது.

**திவ்விய நன்மை உட்கொள்ளுதல்:இசை.7:14**

**இதோ! ஒரு கன்னிகை கர்ப்பந்தரித்து, ஒரு குமாரனைப் பெறுவாள், அவருடைய நாமம் எம்மானுவேல் என்று அழைக்கப்படும்.**

திவ்விய நன்மை உட்கொள்ளுதல் வாக்கியம் நிருப வாசகத்தின் தீர்க்கதரிசனத் தன்மையுள்ள வார்த்தைகளை மீண்டும் கூறுகிறது. கடவுளாகவும், மனிதனாகவும் இருக்கும் அதே வேளையில், பரலோகத்திலிருந்து இறங்கி வந்தவரும், ஜீவிய அப்பமாகவும் அதன் மூலம் கடவுள் நம்மோடும், நம்மிலும் இருக்கச் செய்பவருமாகிய தேவ அப்பமானவராகவும் இருக்கிறவரை கருத்தாங்கிப் பெற்றெடுத்தது ஒரு கன்னிகையே.

## திவ்விய நன்மை உட்கொண்டபின்

**ஆண்டவரே, தேவரீருடைய சம்மனசானவர் மங்களஞ் சொன்னபோது, உம்முடைய திருக்குமாரனாகிய கிறீஸ்துநாதர் மனித அவதாரமானதை அறிந்திருக்கிற நாங்கள், அவருடைய பாடுகளினாலும், சிலுவையினாலும் உத்தானத்தின் மகிமையை அடையத்தக்கதாக எங்கள் இருதயங்களில் உமது வரப்பிரசாதத்தைப் பொழிந்தருள வேண்டுமென்று தேவரீரை மன்றாடுகிறோம். தேவரீரோடு இஸ்பிரீத்துசாந்துவின் ஐக்கியத்தின் சர்வேசுரனும், சதாகாலமும் சீவியரும் இராச்சிய பரிபாலஞ் செய்கிறவருமாயிருக்கிற உமது திருக்குமாரனும் எங்கள் ஆண்டவருமான அதே சேசு கிறீஸ்துவின் பேரால் - ஆமென்.**

திவ்விய நன்மை உட்கொண்டபின் ஜெபத்தில், கடவுள் நம்முடைய இரட்சணியத்திற்காக நிறைவேற்றினவையும், இன்று நாம் சங்கை செய்கிற மாமரியின் விளைவுகளாக இருப்பவையுமாகிய பரம இரகசியங்கள் அனைத்தையும் திருச்சபை நன்றியோடு நினைவுக்குக் கொண்டு வருகிறது. கடவுளின் திருச்சுதனை நம்முடைய மனித சுபாவத்தோடு ஒன்றிக்கிற மனிதாவதாரத்திற்குப் பிறகு, இந்த நம்முடைய தெய்வீக இரட்சகரின் திருப்பாடுகளை நாம் கொண்டிருக்கிறோம். அவருடைய பாடுகளைத் தொடர்ந்து அவருடைய உயிர்ப்பு நிகழ்ந்தது. அந்த உயிர்ப்பின் மூலம் அவர் நம்முடைய எதிரியாகிய சாவின் மேல் வெற்றி கொண்டார்.

இக்கட்டுரை சங். கெராஞ்ஜே சுவாமி என்பரால் எழுதப்பட்ட, “திருவழிபாட்டின் ஆண்டு” என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது. பிரெஞ்சு புரட்சி கத்.திருச்சபைக்கு மாபெரும் அழிவைக் கொண்டுவந்ததை சிறுவயதிலே கண்ட இவர், குருப்பட்டம் பெற்று, சில வருடங்களுக்குப் பின்னர் அர்ச். ஆசீர்வாதப்பர் சபைத் துறவியாக தம்மை அர்ப்பணிக்கத் தூண்டப்பட்டார். அவர் ஒரு பழைய மடத்தை வாங்கி அதனை அதன் பழைய மகிமைக்குத் திரும்ப கொண்டுவந்தார். அவரது அந்தப் புதுப்பித்தல், பிரான்ஸ் நாடு முழுவதிலும் அர்ச். ஆசீர்வாதப்பர் சபை மீண்டும் மகிமைப் பெற உதவியாக இருந்தது. சங். கெராஞ்ஜே சுவாமியின் ஞாயிறு மற்றும் தினசரி பூசைகளின் ஜெபங்கள், வாசகங்களின் விளக்க உரைகளை 15 நூல்களாகக் கொண்ட “திருவழிப்பாட்டின் ஆண்டு” என்ற படைப்பு மகத்துவமிக்கது! தமது சபையில் ஒரு மடாதிபதியாக உயர்ந்த சங். கெராஞ்ஜே சுவாமி 1875-ல் மரணமடைந்தார்.